**<u>DEPOSITION OF WITNESS (Code of Civil Procedure)</u>**

**IN THE COURT OF DISTRICT AND SESSIONS COURT,**

**COMMUNAL CLASH CASES, MADURAI**

**<u>MCOP No. 2283/2017</u>**

<u>மனுதாரர் தரப்பு சாட்சி - 2</u>

Name : ஜோதிமணி

Father's Name :

Village :

Taluk :

Caste :

Religion :

Age :

Solemnly affirmed by Thiru.Suthanathan, Translator of this court in accordance with the provision of Oaths Act of the day of 01th October 2021

**<u>முதல் விசாரணை</u>**

நான் மனுதாரர் தரப்பில் 2 வது சாட்சி ஆவேன். நான் விபத்தை நேரில் பார்த்த சாட்சி ஆவேன். எனக்கு விபத்து குறித்து நன்கு தெரியும். 07.09.2012 அன்று நானும் இறந்து போன ஜீவானந்தமும் மேலூரிலிருந்து மதுரைக்கு உறவினரை பார்ப்பதற்காக TN59 BZ 2295 என்ற இருசக்கர வாகனத்தை இறந்து போன ஜீவானந்தம் ஓட்டிக்கொண்டும், நான் பின்னால் அமர்ந்தும் வந்தேன். மேலூர் யூனியன் ஆபீஸ் பஸ் ஸ்டாப் அருகே தனியார் பேருந்தை பஸ்சை நிறுத்ததில் நிறுத்தியிருந்தார்கள். அந்த வண்டியை தாண்டி செல்லும் போது எங்களுக்கு எதிரே மினி லாரி வந்தது. அந்த மினி லாரியை முந்திக்கொண்டு அரசு விரைவு போக்குவரத்து கழகத்தின் TN01 N 7528 என்ற பதிவெண்கொண்ட பஸ் வந்தது. எதிரே வந்த பஸ் எங்கள் இருசக்கர வாகனத்தின் மீது மோதியதால் நிலை தடுமாறி இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்த ஜீவானந்தம் வலது பக்கமாக விழுந்து விட்டார். எதிரே வந்த அரசு விரைவு போக்குவரத்தின் பஸ்ஸின் மக்காடு இறந்து போன ஜீவானந்தத்தின் தலையில் மோதி நடுத்தலையில் வெட்டுக்காயம் ஏற்பட்டது. எனக்கு வலது தோள்பட்டையிலும், தலையிலும் அடிப்பட்டது. நான் கீழே விழுந்தவுடன் சுயநினைவை இழந்துவிட்டேன். என்னை அரசு மருத்துவமனையில் மேலூரில்

அனுமதித்தார்கள். ஜீவானந்தம் விபத்தில் இறந்த விவரம் எனக்கு மறுநாள் தான் தெரியும். விபத்திற்கு அரசு விரைவு போக்குவரத்தின் ஓட்டுனர் தான் காரணம்.

**எதிர்மனுதாரர் தரப்பு வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.**